அவலமும் அழிவும் நிரந்தரம் இல்லை
சுதந்திர வாசல் தூரத்தில் இல்லை
விதைகள் ஆனோரை நெஞ்சில் நினைப்போம்
உதையத்தை காணவே அஞ்சாதுழைப்போம் 2

இடர்மேல் இடர்கள் தாங்கியே
கனலிடை வேகுதெம் தாயகம்
சொந்த தேசத்தில் அகதிகளாய்
அவலத்தில் அழியுது தமிழினம்
நாளும் படுகொலை வெறியாட்டம்
குருதி வெள்ளத்தில் தமிழ் தேசம் 2
போர் வெறிகொண்டு இனவாட்டம்
ஆடுது கோரத்தின் தாண்டவம் 2
மனித உரிமை முழங்கும் உலகம்
ளைனத்தில் உறைவது என்ன தர்மம் 2

அவலமும் அழிவும் நிரந்தரம் இல்லை
சுதந்திர வாசல் தூரத்தில் இல்லை

கூடு கலைந்த குருவிகள்
வீடு திரும்பிட வழிசெய்வோம்
பள்ளி இழந்த தளிருகள்
கல்வி பயின்றிட வகைசெய்வோம் 2
பட்டினிசாவுகள் தடுப்போம்
பாடுபட்டு துயர் துடைப்போம் 2
விழியில் நெருப்பு சுமப்போம்
நெஞ்சில் பொறுப்பு சுமப்போம் 2
பூபாளப் புதுகாலை புலரட்டும்
இருள் விலகட்டும் விடியல் பரவட்டும் 2

அவலமும் அழிவும் நிரந்தரம் இல்லை
சுதந்திர வாசல் தூரத்தில் இல்லை
விதைகள் ஆனோரை நெஞ்சில் நினைப்போம்
உதையத்தை காணவே அஞ்சாதுழைப்போம் 2